## அனைவருக்கும் வீட்டு வசதி! நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில்

# ரூ.541.32 கோடியில் 4184 குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜுலை 23-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.7.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 541 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4184 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 382 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1459 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.**

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகளை திறந்து வைத்தல்**

அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் சென்னையில் கார்கில் நகர் திட்டப்பகுதியில் தூண் மற்றும் 15 தளங்களுடன் 190 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 1200 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், திருச்சினாங்குப்பம் பகுதி - 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 35 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் 360 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

திருவள்ளூர் மாவட்டம், மணலி புதுநகர் பகுதி - 2 திட்டப்பகுதியில் தூண் மற்றும் 14 தளங்களுடன் 226 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் 1792 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

தேனி மாவட்டம், தம்மணம்பட்டி திட்டப்பகுதியில் 29 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 264 குடியிருப்புகள் மற்றும் 36 தரைத்தள குடியிருப்புகள்;

புதுக்கோட்டை மாவட்டம், பாலன்நகர் பகுதி - 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 23 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் 256 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் கறம்பக்குடி திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 96 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

நீலகிரி மாவட்டம், அல்லாஞ்சி திட்டப்பகுதியில் தரை மற்றும் ஒரு தளத்துடன் 24 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் 180 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

**என மொத்தம் 541 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4184 குடியிருப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், தார் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" திட்டத்தின் கீழ் அனைத்து திட்டப்பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் திறந்து வைத்தல்**

தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு திட்டத்தின் கீழ், சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 344 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1387 அடுக்குமாடி குடியிருப்புகள், அரியலூர் மாவட்டம், அரியலூரில் 19 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 72 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் சென்னை மாவட்டம், அசோகா காலனியில் 19 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம்;

**என மொத்தம் 382 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 1459 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகக் கட்டடம் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கீ.சு.சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.7.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 541 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4184 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 382 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1459 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் ஆகியவற்றையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கீ.சு.சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கோவை மாநகர் மாவட்டத்தில்

## பகுதி வாரியாக கழக உறுப்பினர் உரிமை சீட்டு வழங்குதல் !

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு !

*கோவை, ஜுலை 23-*

*கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-*



*தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழ றிஞர், செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழகத்தின் பவளவிழா ஆண்டை முன்னிட்டு, புதிய கழக உறுப்பினர் படிவத்தை பூர்த்தி செய்து தலைமைக்குக் கொடுத்தவர்களுக்கு,தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட கழக உறுப்பினர் கார்டுகளை கீழ்க்கண்ட தேதி களில், கோவை மாநகர் மாவட்டத்தில் பகுதி வாரியாக வழங்கப்பட உள்ளது.*

*23.7.2024 செவ்வாய்க்கிழமை வடவள்ளி பகுதி மாலை 4.30மணி*

*23.7.2024 பாப்பநாய்க்கன் புதூர் பகுதி மாலை 6.00மணி*

*23.7.2024 வேலாண்டிபாளையம் பகுதி மாலை 7மணி*

*24.7.2024 புதன்கிழமை சாய்பாபாகாலனி பகுதி மாலை 4.30மணி*

*24.7.2024 கணபதி பகுதி மாலை 6.00மணி*

*24.7.2024 மணியகாரன்பாளையம் பகுதி மாலை 7.00மணி*

*25.7.2024 வியாழக் கிழமை காந்திபுரம் பகுதி மாலை 4.30மணி*

*25.7.2024 பெரியகடை வீதி பகுதி 1 மாலை 5.30மணி*

*25.7.2024 பெரியகடை வீதி பகுதி2 மாலை 6.30மணி*

*25.7.2024 ராமநாதபுரம் பகுதி மாலை 7.30மணி*

*26.7.2024 வெள்ளிக்கிழமை சிங்காநல்லூர் பகுதி1 மாலை 4.30மணி*

*26.7.2024 சிங்காநல்லூர் பகுதி2 மாலை 6.00மணி*

*26.7.2024 சிங்காநல்லூர் பகுதி3 மாலை 7.00மணி*

*27.7.2024 சனிக்கிழமை பீளமேடு பகுதி1 மாலை 4.30மணி*

*27.7.2024 பீளமேடு பகுதி2 மாலை 6மணி*

*27.7.2024 பீளமேடு பகுதி3 மாலை 7.00மணி*

*மேற்கண்ட அட்டவணைப்படி கழக உறுப்பினர் கார்டுகள் வழங்கப்படுவதை பகுதி கழக செயலாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் பணம் கட்டி ரசீது வாங்கியவர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

*கழக உறுப்பினர் கார்டுகள் வழங்கும் ஏற்பாடுகளை அந்தந்த பகுதிக் கழகச் செயலாளர், வட்டக் கழகச் செயலாளர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



திராவிட மாடல் ஆட்சி தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் பொதுப்பணி நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி, திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் ஒன்றியம் பொம்மிகுப்பம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் சுமார் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக பகுதி நேர நியாய விலைக் கடை கட்டிடத்தை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மக்கள் சேவகர் எ.நல்லதம்பி கட்டிடத்தை திறந்து வைத்தார். இதில் நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட குழு உறுப்பினர் எம்.ராஜேந்திரன், எஸ்.சி. விஜயகுமார், மாவட்டப் பிரதிநிதி எஸ்.சரவணன், ஊராட்சி பிரதிநிதிகள் திருப்பத்தூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கு.பிரேம்குமார், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கிளை கழக நிர்வாகிகள் விஜயகுமார், மு.ஒன்றிய குழு உறுப்பினர் அண்ணாமலை மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

### மோசடிகளின் மொத்த உருவமாக காணப்படும் 'நீட்' தேர்வை புறந்தள்ளுவோமென்ற

## தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் கோரிக்கைக்கு ஒன்றிய அரசு செவி மடுக்க வேண்டும்!

### "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

**சென்னை, ஜுலை 23-**

**மோசடிகளின் மொத்த உருவமாக காணப்படும் 'நீட்' தேர்வை புறம் தள்ளுவோம் என்கிற தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் கோரிக்கைக்கு எதிர்காலத்திலாவது ஒன்றிய அரசு செவி மடுக்க வேண்டும் என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.**

அது வருமாறு:–

தொழில்நுட்ப படிப்புகளின் தரத்தை உயர்த்துவதும், அதில் சேர விரும்பும் மாணவர்களின் திறமைகளை எடைபோடும் வகையில் இருப்பதுதான் தேசிய அளவிலான பொது நுழைவுத்தேர்வுகளின் நோக்கமாகும். ஆனால் நீட் உள்ளிட்ட தேர்வுகள் அனைத்து விதமான மோசடிகளின் ஆணிவேராக உள்ளன. நடப்பாண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் 571 நகரங்களில் கடந்த மே 5ம் தேதி நடந்தது. இத்தேர்வை 23 லட்சத்து 33 ஆயிரத்து 297 பேர் எழுதினர்.

தேர்வெழுதியவர்களின் எண்ணிக்கையை கூட தேர்வு முகமையால் சரிவர தர முடியவில்லை. ஜுன் 4ம் தேதி தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில், மொத்தம் 13 லட்சத்து 16 ஆயிரத்து 268 பேர் தேர்ச்சி பெற்றனர். இந்த தேர்வில் இதுநாள் வரை இல்லாத அளவுக்கு 67 பேர் முழு மதிப்பெண்கள் பெற்றிருந்தனர். மேலும் நேரக்குறைபாடு சிக்கல்கள் காரணமாக 1563 பேருக்கு கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. வினாத்தாள் விற்பனை, ஆள் மாறாட்டம் என பல்வேறு முறைகேடுகள் இம்முறை நீட் தேர்வில் நடந்தேறின.

இதையடுத்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் குவிந்தன. தேசிய அளவிலான ஒரு நுழைவுத்தேர்வில் இத்தனை முறைகேடுகளா என மாணவர் சமுதாயமே கொந்தளித்தது. கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் கருணை மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு, மீண்டும் மறுத்தேர்வு ஜுன் 23ம் தேதி நடத்தப்பட்டது. நீட் தகுதி தேர்வை ரத்து செய்துவிட்டு, மறுத்தேர்வு நடத்திட வேண்டும் என பல்வேறு கோரிக்கைகள் எழுந்த நிலையில், உச்சநீதிமன்றம் அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டது.


தினகரன்

தொடரும் நீட் அநீதி

அதேசமயம் நீட் தேர்வில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் மையங்கள் வாரியாக தேர்வு முடிவுகளை வெளியிட கோர்ட் உத்தரவிட்டது. இதிலும் பல பூதங்கள் வெளிவர தொடங்கியுள்ளன. குஜராத் மாநிலம் ராஜ்கோட், ராஜஸ்தான் மாநிலம் சிகார் ஆகிய தேர்வு மையங்களில் தேர்வு எழுதியோர் அதிகபட்ச தேர்ச்சி பெற்றது தெரிய வந்துள்ளது. ராஜ்கோட் மையத்தில் தேர்வு எழுதிய மாணவர்களில் 70 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குஜராத்தில் மட்டுமே 700 மதிப்பெண்களுக்கு மேல் 122 மாணவர்கள் பெற்றுள்ளனர். ராஜஸ்தானில் 700 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 482 ஆக உள்ளது. இதில் சிகார் பகுதியைச் சேர்ந்த 149 மாணவர்கள், நாட்டிலேயே அதிக பட்ச தேர்ச்சியை பெற்றுள்ளனர். மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களிலும் நல்ல தேர்ச்சியை மாணவர்கள் பெற்றிருப்பது, பா.ஜ. ஆளும் மாநிலங்களில் மருத்துவர்களை அதிகரிக்க திட்டமிட்டிருப்பதாகவே தெரிகிறது.

நீட் முறைகேடுகள் அதிகம் நடந்த குஜராத், ராஜஸ்தான், உ.பி. மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தேர்ச்சி விகிதமும் அதிகரித்திருப்பது பல்வேறு வினாக்களை எழுப்புகிறது. நீட் தேர்வுகளில் இவ்வாறு முறைகேடுகள் அதிகரித்தால், எதிர்காலங்களில் ஒருவர் பிளஸ்2 வரை பெயரளவுக்கு படித்துவிட்டு, நீட் தேர்வில் மட்டும் சாதித்து விட்டால், மருத்துவ கனவை நனவாக்கி கொள்ள முடியும். நல்ல மருத்துவராக ஒருவர் உயர்வதற்கும், நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கும் தொடர்புள்ளதா என்றால், நிச்சயமாக இல்லை.

பிளஸ்2 வரை ஒருவர் முதல் மதிப்பெண் பெற்றுவிட்டு, நீட் தேர்வு என்னும் தடை தாண்டும் ஓட்டத்தில் பின்தங்கும்போது, அவரது மருத்துவ கனவு பொசுங்கி விடுகிறது. மோசடிகளின் மொத்த உருவமாக காணப்படும் நீட் தேர்வை புறம் தள்ளுவோம் என்கிற தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் கோரிக்கையை எதிர்காலத்திலாவது ஒன்றிய அரசு செவிமடுக்க வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## தருமபுரி கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தருமபுரி கிழக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் மு.அண்ணாதுரை மறைவெய்திய காரணத்தால், **என். தேவராஜன்**, பி.காம்., (47-எப்-1, நித்தியாநந்தம் தெரு, குமாரசாமி பேட்டை, தருமபுரிமாவட்டம்) அவர்கள் தருமபுரி கிழக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.07.2024

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

